ஊடக அறிவித்தல் இல. 04

# தேர்தல் ஆணைக்குழு

2021 சனவரி மாதம் 21 ஆந் திகதி ஒன்றுகூடிய தேர்தல் ஆணைக்குழு பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

- அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்யும்போது 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதற்கிசைவான அளவுகோல்கள் குறிப்பாகக் காணப்படாமையால், சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த அளவுகோல்களைத் தயாரித்து வர்த்தமானியொன்றின் மூலம் வெளியிடுதல்.

- 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தேர்தல்களின் நோக்கங்களுக்காக 2021 ஆம் ஆண்டுக்காக அரசியல் கட்சிகளுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள சின்னங்களையும் அரசியல் கட்சிகளுக்கு இதுவரை குறித்தொதுக்கப்படாத சின்னங்களையும் வெவ்வேறாக அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுதல்.

- வன்னி தேர்தல் மாவட்டத்தில் வதிவு காணப்படாமையால், தேருநர் இடாப்பில் பெயர்கள் நீக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு 2020 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்ப்பதற்கான உரிமைக்கோரிக்கைக் காலம் தற்போது கடந்துள்ளபோதும், அவர்களிடமிருந்து கிடைக்கும் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கும் வதிவை உறுதிப்படுத்துவதற்கும் பரீட்சிப்புக்கான வாய்ப்புகளை வழங்குதல். எனினும், தொடர்ந்தும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வதிவோர் இருப்பார்களாயின் மாத்திரம் அவர்கள் முன்பு பதிவுசெய்த மாவட்டத்தில் பதிவுசெய்தல்.

எச்.எம்.ரி.டி.ஹேரத்
செயலாளர்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2021 சனவரி மாதம் 22 ஆந் திகதி